RNI-N0: TNTAM/2021/83936




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING www.malaithanthi.in மாலை நாளிதழ்

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




சிவகங்கை | மலர்-5 | இதழ்- 172 | ஜுன்.29 2026 திங்கள்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ. 5

# போலியோ சொட்டு மருந்து முகாமை தொடங்கி வைத்தார் முதல்வர் விஜய்

**சென்னை: ஜுன்.29–**

தமிழகத்தில் நடைபெற்று வரும் போலியோ சொட்டு மருந்து முகாமை சென்னை பாலவாக்கத்தில் முதல்வர் விஜய் தொடங்கி வைத்தார்.

தமிழக முதல்வர் ஜோசப் விஜய் நேற்று )28.6.2026) மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை சார்பில் சென்னை, பாலவாக்கம், அரசு ஆதிதிராவிடர் நல உயர்நிலைப் பள்ளியில் நடைபெற்ற தேசிய போலியோ சொட்டு மருந்து சிறப்பு முகாமில் குழந்தைகளுக்கு சொட்டு மருந்து வழங்கினார். மேலும், குழந்தைகளுக்கு பொம்மைகளையும் முதல்வர் பரிசளித்தார்.

இந்நிகழ்ச்சியில், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அருண்ராஜ், சட்டப்பேரவை உறுப்பினர் பி.சரவணன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அரசு செயலாளர் தாரேஸ் அகமது, பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் ஜி.எஸ். சமீரன், தேசிய நலவாழ்வு குழும இயக்குநர் அனீஷ் சேகர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.




இந்தியாவில் போலியோவை (இளம்பிள்ளை வாதம்) ஒழிப்பதற்காக ஆண்டுதோறும் 5 வயதுக்கு உட்பட்ட குழந்தைகளுக்கு 2 தவணைகளில் போலியோ சொட்டு மருந்து வழங்கப்பட்டு வந்தது. போலியோ ஒழிக்கப்பட்ட நாடுகளின் பட்டியலில் இந்தியாவும் சேர்ந்துள்ளது. அதனால், தற்போது ஆண்டுக்கு ஒருமுறை மட்டும் போலியோ சொட்டு மருந்து வழங்கப்படுகிறது.

அதன்படி, இந்த ஆண்டுக்கான போலியோ சொட்டு மருந்து வழங்கும் முகாம் நாடு முழுவதும் இன்று நடைபெறுகிறது. தமிழகம் முழுவதும் காலை 7 மணி முதல் மாலை 5 மணி வரை நடைபெறவுள்ள இந்த முகாமில் 5 வயதுக்கு உட்பட்ட 52.91 லட்சம் குழந்தைகளுக்கு போலியோ சொட்டு மருந்து வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

தமிழகத்திலுள்ள அரசு மருத்துவமனைகள், அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள், அங்கன்வாடி மையங்கள், சத்துணவு மையங்கள், பள்ளிகள் மற்றும் முக்கிய இடங்கள் என மொத்தம் 43,051 மையங்களில் நடைபெறும் முகாம்களில் போலியோ சொட்டு மருந்து வழங்கப்பட்டு வருகிறது.

நடமாடும் குழுக்கள் ஏற்பாடு: பேருந்து நிலையங்கள், ரயில் நிலையங்கள், விமான நிலையங்கள், சோதனைச்சாவடிகளிலும் சொட்டு மருந்து வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. தொலைதூரம் மற்றும் எளிதில் செல்ல முடியாத பகுதிகளில் வசிக்கும் குழந்தைகளுக்கு சொட்டு மருந்து வழங்க நடமாடும் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. சுகாதாரப் பணியாளர்கள், அங்கன்வாடி பணியாளர்கள், ஆசிரியர்கள், தன்னார்வலர்கள் என 2 லட்சத்துக்கும் மேற்பட்டோர் சொட்டுமருந்து வழங்கும் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

தேசிய தடுப்பூசி அட்டவணைப்படி ஏற்கெனவே குழந்தைகளுக்கு போலியோ சொட்டு மருந்து வழங்கப்பட்டிருந்தாலும் முகாம் நாளில் மீண்டும் சொட்டு மருந்து வழங்கப்பட வேண்டும். அண்மையில் பிறந்த குழந்தைகளுக்கும் முகாம் அன்று சொட்டு மருந்து கொடுப்பது அவசியமாகும். விடுபட்ட குழந்தைகளுக்கு முகாம் முடிந்த பிறகு 29, 30ம் தேதிகளில் தற்காலிக மையங்களில் போலியோ சொட்டு மருந்து வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. சென்னையைப் பொருத்தவரை 5 வயதுக்கு உட்பட்ட சுமார் 5.56 லட்சம் குழந்தைகளுக்கு போலியோ சொட்டு மருந்து கொடுப்பதற்கு 1,641 மையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. சொட்டு மருந்து வழங்கும் பணியில் 6,564 பேர் ஈடுபடுத்தப்பட்டனர்.



## கடந்த ஆட்சி காலத்தில் நடந்த முறைகேடுகள் அனைத்தும் விரைவில் தெரியவரும்

கும்பகோணம்: ஜுன்.29-

கும்பகோணத்தில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்க வந்த தமிழக நிதித்துறை அமைச்சர் மரிய வில்சன் செய்தியாளர்களிடம் கூறியது:

மகாமகம் 2028ல் நடத்துவது தொடர்பாக வேளாண் துறை அமைச்சர் வினோத், தமிழக முதல்வரிடம் கோரிக்கை வைப்பார். அதன் அடிப்படையில் முடிவுகள் எடுக்கப்படும்.

மாநிலத்தின் வருவாய் மிகப்பெரிய வீழ்ச்சி அடைந்தது தொடர்பாக வரப் போகின்ற நாட்களில் கசிவுகள் அடைக்கப்படும்.

அந்த லீகேஜ்களை அடைத்தால் நன்றாக இருக்கும். கடந்த ஆட்சி காலத்தில் நடைபெற்ற ஊழல், முறைகேடுகள் குறித்து, தமிழர் முதல்வர் ஆய்வு மேற்கொண்டு வருகிறார். அதன் அடிப்படையில் எடுக்கப்படும் நடவடிக்கை குறித்து அவர் முடிவு செய்வார். இது தொடர்பாக அனைத்தும் அனைவருக்கும் விரைவில் தெரியவரும் என்றார். அவருடன் வேளாண் துறை அமைச்சர் வினோத் உடன் இருந்தார்.

முன்னதாக, அமைச்சர்கள் மரிய வில்சன் வினோத் ஆகியோர் கும்பகோணத்தில் உள்ள தூய அலங்கார அன்னை பேராலயத்தில் வழிபாடு செய்து மெழுகுவர்த்தி ஏற்றி வழிபட்டனர். தொடர்ந்து ஆதிகும்பேஸ்வரர் கோயிலில் சுவாமி தரிசனம் மேற்கொண்டனர்.

## “சட்டப்பேரவையின் தரத்தை ஆளுங்கட்சி குறைத்து வருகிறது”

தஞ்சாவூர்: ஜுன்.29-

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாட்டில் நடைபெற்ற திமுக நிர்வாகி இல்ல திருமண விழாவில் பங்கேற்று உதயநிதி ஸ்டாலின் பேசியது: இந்த சோ:ஃபா மாடல் ஆட்சியின் போலி பிம்பம் கடந்த ஒரு மாதத்தில் நொறுங்கிக் கிடக்கிறது. ஒவ்வொரு நாளும் இந்த ஆட்சியின் அவலங்கள் அனைத்தையும் மக்கள் புரிந்து வருகின்றனர். இந்த அரசின் தவறுகளை, சறுக்கல்களை இளைஞர்கள் தட்டிக் கேட்கத் தொடங்கிவிட்டனர். ஆனால், அப்படி தட்டிக்கேட்கிற இளைஞர்களை, நம்முடைய கழகத்தினரை கைது செய்யும் வேலையை இந்த ஷோ:ஃபா மாடல் அரசு தொடங்கியுள்ளது.

தூய சக்தி எனக் கூறி ஆட்சிக்கு வந்தவர்கள், அடுத்து நிமிடங்களில் குதிரை பேரத்தைத் தொடங்கிவிட்டனர். மேலும், தமிழ்நாட்டில் எங்கு பார்த்தாலும் மின் வெட்டு நிகழ்கிறது. இதனால், விவசாயிகள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர். தமிழ்நாடு அரசு அறிவித்த குறுவை சாகுபடி சிறப்பு தொகுப்புத் திட்டம் போதவில்லை என விவசாயிகள் சாலையில் வந்து போராட்டம் நடத்துகின்றனர்.

இதை சட்டப்பேரவையில் கூறியபோது, திமுகவின் தூண்டுதலால் விவசாயிகள் போராட்டத்துக்கு வருவதாக முதல்வர் கூறினார். தமிழ்நாட்டில் தற்போது சட்டம் ஒழுங்கை ஆட்சியாளர்கள் படுகுழியில் தள்ளியுள்ளனர். இது குறித்து சட்டப்பேரவையில் பேசியபோது, அதற்கு முதல்வர் பதில் அளிக்கவில்லை. சட்டப்பேரவையில் ஆளுங்கட்சியினர் என்னென்ன கூத்துகள் நடத்தினர் என்பது அனைவரும் தொலைக்காட்சியில் பார்த்துள்ளனர்.

இது சட்டப்பேரவையா அல்லது திரையரங்கமா அல்லது சூட்டிங் நடைபெறும் இடமா எனக் கேட்கும் அளவுக்கு சட்டப்பேரவையின் தரத்தை ஆளுங்கட்சி குறைத்து வருகிறது. ஆனால், எதற்கெடுத்தாலும் திமுகதான் காரணம் என ஆயத்தமான பதிலை ஆட்சியாளர்கள் வைத்துள்ளனர். தமிழ்நாடு தற்போது மிகப் பெரிய பேரிடரில் சிக்கியுள்ளது. இதிலிருந்து தமிழ்நாட்டை மீட்க வேண்டியது நம்முடைய பொறுப்பு. அதற்காக நாம் அனைவரும் வருங்காலத்தில் ஒற்றுமையுடன் உழைக்க வேண்டும். இவ்வாறு உதயநிதி பேசினார்.

## மதிமுக முன்னாள் மாநில, மாவட்ட நிர்வாகிகள் 150 பேர் திமுகவில் ஐக்கியம்

**சென்னை: ஜுன்.29–**

மதிமுகவைச் சேர்ந்த முன்னாள் மாநில, மாவட்ட நிர்வாகிகள், வழக்கறிஞர்கள் 150க்கும் மேற்பட்டோர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில் திமுகவில் இணைந்தனர்.



இதுகுறித்து திமுக தரப்பில் வெளியான அறிக்கையில், ‘திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில், நேற்று (28.06.2026) காலை, அண்ணா அறிவாலயத்தில், ம.தி.மு.க.வைச் சேர்ந்த முன்னாள் நிர்வாகிகளான சிவகங்கை மாவட்டச் செயலாளரும், உயர்நிலைக்குழு உறுப்பினருமான புலவர் செ.செவந்தியப்பன், திருவள்ளூர் மாவட்டச் செயலாளரும், உயர்நிலைக்குழு உறுப்பினருமான டி.ஆர். ஆர்.செங்குட்டுவன், கொள்கை பரப்பு செயலாளரும், உயர்நிலைக்குழு உறுப்பினருமான திருப்பரங்குன்றம் பொடா அழகுசுந்தரம், விருதுநகர் மாவட்டச் செயலாளர் ஆர்.எம்.எஸ்.சேகர், மாநில தேர்தல் பணி துணைச் செயலாளர் தஞ்சாவூர் விடுதலைவேந்தன், தலைமைச் செயற்குகுழு முன்னாள் உறுப்பினர் டி.ஆர்.ஆர்.மதியழகன்;

திருப்பூர் மாவட்டத்தைச் சேர்ந்த நிர்வாகிகளான மாநில மாணவர் அணி துணைச் செயலாளர் ஆர்.எஸ்.கோவிந்தராஜன், மாவட்ட தொண்டர் அணி அமைப்பாளர் ம.ராஜகோபால், சாமளாபுரம் பேரூர்ச் செயலாளர் எஸ்.செல்வராஜ், மாவட்ட மகளிர் அணி அமைப்பாளரும், பல்லடம் நகர்மன்ற துணைத் தலைவருமான நர்மதா இளங்கோவன், பொதுக்குழு உறுப்பினர்கள் இளங்கோவன், சாமிநாதன், மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் கார்த்திக், பல்லடம் நகர துணைச் செயலாளர் ஜெகநாதன், பல்லடம் நகர்மன்ற முன்னாள் உறுப்பினர் வெங்கடேஷ்;

மற்றும் முன்னாள் நிர்வாகிகளான மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர் புதுக்கோட்டை சதாசிவம், மாநில மாணவர் அணி துணைச் செயலாளர்கள் சிவகாசி மு.செல்வராஜ், திருப்பூர் ஆர்.எஸ்.கோவிந்தராஜன், நகரச் செயலாளர் எஸ்.கே. ரவிச்சந்திரன், ஆர்.எம். எஸ்.சேகர், விருதுநகர் மாவட்ட வழக்கறிஞர் அணி வழக்கறிஞர் பாரதமணி, மதுரை மாவட்ட பொறியாளர் அணி சி.எல்.ராஜா.

சிவகங்கை மாவட்ட நிர்வாகிகளான மாவட்ட அவைத்தலைவர் எம்.ஜெயபிரகாஷ், பொதுக்குழு உறுப்பினர்களான என்.ராமச்சந்திரன், ஏ.சி.முத்து, பி.சதாசிவம், இளைஞர் அணி வி.அருள்செல்வம், பி.கந்தசாமி, திருவள்ளூர் மாவட்டத்தைச் சேர்ந்த மாவட்ட பொறியாளர் அணி கே.ரகுராமகிருஷ்ணன், பொன்னேரி பேரூர்ச் செயலாளர் மதிவாணன், மோகன், ஞானவேல்.

கடலூர் மாவட்டத்தைச் சேர்ந்த மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி ஆகாஷ்ராஜ், அத்துடன் பொடா அழகுசுந்தரம் ஏற்பாட்டில் சென்னை அம்பேத்கர் சட்டப் பல்கலைக் கழக மாணவர்கள் ஏ.அன்பரசன் தலைமையில் 40 பேர் உள்ளிட்ட 150க்கும் மேற்பட்டோர் தி.மு.க.வில் இணைந்தனர்.

அதுபோது கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு, முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு, துணைப் பொதுச்செயலாளர் கனிமொழி கருணாநிதி, அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, செய்தி தொடர்பு தலைவர் டி.கே. எஸ்.இளங்கோவன், திருவாரூர் மாவட்டச் செயலாளர் பூண்டி கே.கலைவாணன், திருவள்ளூர் மத்திய மாவட்டச் செயலாளர் ஆவடி சா.மு.நாசர், மகளிர் அணி தலைவர் விஜயா தாயன்பன், பல்லடம் முத்துரத்தினம், தாராபுரம் கவின் நாகராஜ் ஆகியோர் உடனிருந்தனர்’ எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## போதைப் பொருள் விவகாரம்: அமைச்சர் சரத்குமாரை பதவி நீக்கக் கோரி திமுக ஆர்ப்பாட்டம் அறிவிப்பு

சென்னை: ஜுன்.29-

பொது இடத்தில் போதைப் பொருள் பயன்படுத்தியது போல் வீடியோ வெளியான விவகாரத்தில் தவெக அமைச்சர் சரத்குமாரை பதவி நீக்கம் செய்ய வலியுறுத்தி திமுக மாணவரணி ஆர்ப்பாட்டம் அறிவித்துள்ளது.

இதுகுறித்து திமுக வெளியிட்ட அறிக்கையில், ‘இளைஞர்களையும் சமுதாயத்தையும் சீரழிக்கும் போதைப் பொருட்கள் பயன்பாட்டைத் தடுத்து நிறுத்துவதோடு, அதற்கு எதிரான விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டியது சமூகப் பொறுப்புள்ள ஒவ்வொருவரின் கடமை. ஆனால், ஆளும் த.வெ.க. அரசில் இடம்பெற்றுள்ள அமைச்சர்களின் செயல்பாடுகள் அவ்வாறானதாக இல்லை.

குறிப்பாக, மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் டி.சரத்குமார், போதைப் பொருளைப் பயன்படுத்துவது போன்ற வீடியோ ஒன்று, போதைப்பொருள் ஒழிப்பு நாளன்று வெளியாகி சர்ச்சையை உருவாக்கியுள்ளது. அமைச்சரும் அதற்கு விளக்கமளிக்கிறேன் பேர்வழி என்று, த.வெ.க.வின் பாரம்பரியப்படி, குழந்தைக்குப் பின்னால் ஒளிந்துகொண்டு அரசியல் செய்வதாகவே தோன்றுகிறது.

அவர் போதைப் பொருள் பயன்படுத்தினரா இல்லையா என்று அவரைக் காக்க பட்டிமன்றம் நடத்துவதைவிட, பொதுவெளியில் போதைப் பொருட்களைப் பயன்படுத்துவது போல் வீடியோ எடுத்து, அதனை “Thug Life Moment” என்று ரீல்ஸ் ஆக வெளியிட்டு தவறான செயலைச் செய்ய இளைஞர்களை ஊக்குவிக்கும் அவரது செயல் கடுமையாகக் கண்டிக்கத்தக்கது.

எனவே, இத்தகைய ஒருவர் அமைச்சரவையில் தொடர்வது, எவ்விதத்திலும் தமிழ்நாட்டு இளைஞர்களுக்கு நன்மை தரக்கூடியது அல்ல என்பதால், மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் சரத்குமாரை உடனடியாகப் பதவிநீக்கம் செய்ய வலியுறுத்தி, தி.மு.க. மாணவர் அணிச் சார்பில் 29 062026 (திங்கட்கிழமை) அன்று கழக மாவட்டத் தலைநகரங்களில் “மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்” நடைபெறும்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் மாவட்ட ஒன்றிய நகர பேரூர் கழக மாணவரணி நிர்வாகிகள் மற்றும் மாணவர்கள் பெருந்திரளாகக் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

மேலும், “பூமியில் இருக்குது மூனு பங்கு தண்ணிடா, தண்ணிய அடிப்பதில் தப்பு ஒன்னும் இல்லடா” “பத்தாது பாட்டில் நான் குடிக்க, அண்டால கொண்டா சியர்ஸ் அடிக்க” போன்ற தத்துவப் பாடல்கள் மூலம் ரசிகக் கூட்டத்தை உருவாக்கிய முதல்வரின் அமைச்சரவையில் உள்ள அமைச்சர்கள், இன்னுமும் ரசிக மனநிலையிலேயே இருக்கின்றனர்.

அதிலும் அமைச்சர் ஜெகதீஸ்வரி அவர்களது கையில் முதல்வர் விஜய் புகைப்பிடிப்பது போன்ற “டாட்டு”வைப் போட்டுக்கொண்டு, அவரது தத்துவப் பாடல்களை இளைஞர்களிடம் கொண்டு சேர்க்கும் பணியைச் செய்து கொண்டிருக்கிறார். இதனையெல்லாம் கண்டிக்க வேண்டிய முதல்வரோ, இதையெல்லாம் ரசிக்கின்ற மனநிலையில் தேங்கி நிற்கிறார் என்பதை வேதனையோடு பதிவு செய்து, அமைச்சர்களின் இத்தகைய மாண்பற்ற போக்குகளை முதல்வர் கண்டித்து இதற்கெல்லாம் முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என தி.மு.க. மாணவரணி வலியுறுத்துகிறது.’ எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# 20 ஆண்டுகளாக காத்திருப்பு: வழுதூர் மின் நிலைய 86 ஒப்பந்த தொழிலாளர்களுக்கு பணி நிரந்தரம் வழங்க கோரிக்கை



மதுரை, ஜூன்.29-

இராமநாதபுரம் மாவட்டம், வழுதூர் எரிவாயு சுழலி மின் நிலையத்தில் 20 ஆண்டுகளுக்கும் மேலாக பணியாற்றி வரும் 86 ஒப்பந்த தொழிலாளர்களுக்கு பணி நிரந்தர ஆணை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என தமிழக எரிசக்தி வளங்கள் மற்றும் சட்டத்துறை அமைச்சர் சி.டி.ஆர். நிர்மல் குமாரிடம் மனு அளிக்கப்பட்டுள்ளது.

அந்த மனுவில், 2002ஆம் ஆண்டு முதல் மின் நிலையத்தின் நிறுவும் பணிகளிலும், 2004ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து ஒப்பந்த தொழிலாளர்களாகவும் பணியாற்றி வருவதாக தெரிவித்துள்ளனர். தங்களது உழைப்பின் மூலம் மின் நிலையம் சிறந்த செயல்திறனுக்கான விருதுகளைப் பெற்றுள்ளதாகவும், பல்வேறு காலகட்டங்களில் அமைச்சர்கள் மற்றும் மின்வாரிய உயரதிகாரிகள் பணி நிரந்தரம் வழங்க உறுதியளித்ததாகவும் குறிப்பிட்டுள்ளனர்.

மேலும், மின்வாரிய உத்தரவின் அடிப்படையில் 86 தொழிலாளர்களின் கல்வி மற்றும் பணிச் சான்றிதழ்கள் சரிபார்க்கப்பட்டு தகுதியுடையோர் பட்டியலும் தயார் செய்யப்பட்டிருந்தும், இதுவரை பணி நிரந்தர ஆணை வழங்கப் படவில்லை என மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, 20 ஆண்டுகளுக்கும் மேலாக குறைந்த ஊதியத்தில் தொடர்ந்து பணியாற்றி வரும் தங்களுக்கு, ஏற்கனவே நடைபெற்ற சான்றிதழ் சரிபார்ப்பின் அடிப்படையில் உடனடியாக பணி நிரந்தர ஆணை வழங்க தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஒப்பந்த தொழிலாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# ரோட்டரி கிளப் ஆஃப் ஆர்ச் சிட்டி மெட்ராஸ் புதிய நிர்வாகிகள் பதவியேற்பு விழாவில் மகளிருக்கு ஆட்டோ வழங்குதல், 10,000 மரக்கன்றுகள் நடுதல், கல்வி உதவி உள்ளிட்ட வழங்கப்பட்டது



சென்னை, ஜூன்.29-

சென்னை ரோட்டரி கிளப் ஆஃப் ஆர்ச் சிட்டி மெட்ராஸ் (RI District 3233) அமைப்பின் 2026-27 ஆம் ஆண்டிற்கான புதிய நிர்வாகிகள் பதவியேற்பு விழா சிறப்பாக நடைபெற்றது.

விழாவில், அமைப்பின் 31வது தலைவராக ரோட்டேரியன் ராமகிருஷ்ணன் வி. நாயக் பதவியேற்றுக் கொண்டார். அவருடன் புதிய நிர்வாகக் குழு உறுப்பினர்களும் பொறுப்பேற்று, சமூக சேவையை மேலும் வலுப்படுத்த உறுதியேற்றனர்.

இந்த நிகழ்வில் பல்வேறு மக்கள் நலத் திட்டங்கள் தொடங்கப்பட்டன. ஒரு தேவையுள்ள மகளிர் ஆட்டோ ஓட்டுநருக்கு புதிய ஆட்டோ வழங்கப்பட்டது. சுற்றுச்சூழல் பாதுகாப்பை வலியுறுத்தும் வகையில் 10,000 மரக்கன்றுகள் நடும் திட்டம் அறிவிக்கப்பட்டது.

மேலும், 500 பெண்கள் மாதம் ரூ.10,000 முதல் ரூ.25,000 வரை வருமானம் ஈட்டும் வகையில் வாழ்வாதார மேம்பாட்டு திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. அத்துடன், ஆறு கல்லூரி மாணவர்களுக்கு கல்விக் கட்டண உதவியும் வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில் ரோட்டரி மாவட்ட ஆளுநர் (2026-27) ரோட்டேரியன் ஸ்ரீராம் துவ்வூரி சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு புதிய நிர்வாகிகளுக்கு வாழ்த்துகளைத் தெரிவித்தார். முன்னாள் சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி நீதியரசர் எஸ். ராஜேஸ்வரன் மற்றும் கல்வியாளர், சமூக சேவகர் ரோட்டேரியன் சேது குமரன் ஆகியோர் கௌரவ விருந்தினர்களாக பங்கேற்று சிறப்புரையாற்றினர்.

புதிய தலைவர் ராமகிருஷ்ணன் வி. நாயக், ரோட்டரி அமைப்பின் சேவைப் பணிகளை மேலும் விரிவுபடுத்தி, சமூக முன்னேற்றத்திற்கான பல்வேறு நலத்திட்டங்களை தீவிரமாக செயல்படுத்துவோம் என்று உறுதியளித்தார்.

விழாவில் ரோட்டரி உறுப்பினர்கள், நிர்வாகிகள் மற்றும் ஏராளமான சிறப்பு அழைப்பாளர்கள் கலந்து கொண்டனர். நிகழ்ச்சி நிறைவில் நட்பு சந்திப்பும், இரவு விருந்தும் நடைபெற்றது.



# உதகை தாவரவியல் பூங்காவில் தொடர் விடுமுறையால் சுற்றுலாப் பயணிகள் வருகை அதிகரிப்பு

நீலகிரி, ஜூன்.29-

நீலகிரி மாவட்டம் உதகை அரசு தாவரவியல் பூங்காவில் தொடர்விடுமுறை காரணமாக வெளி மாநில ,வெளி மாவட்ட சுற்றுலாப் பயணிகள் வருகை தந்து உதகை அரசு தாவரவியல் பூங்காவினை கண்டு ரசித்தனர் மேலும் நீலகிரி மாவட்டத்திலுள்ள உதகை படகு இல்லம் ரோஜா பூங்கா குன்னூர் சிம்ஸ்பூங்கா உட்பட பல சுற்றுலாதலங்களையும் சுற்றுலாப் பயணிகள் கண்டு ரசித்தனர். கோடை விடுமுறைக்கு பின்பு ஜூன் மாதம் பள்ளி கல்லூரிகள் திறக்கப்பட்ட நிலையில் தற்போது தொடர்விடுமுறை காரணமாக சுற்றுலாப் பயணிகள் வருகை குறிப்பிட்ட தக்கது.



# தமிழக முதலமைச்சர் பிறந்தநாள் விழா முன்னிட்டு 1552 பேருக்கு சமபந்தி அசைவ விருந்து மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா

திருநீர்மலை, ஜூன்.29-

செங்கல்பட்டு மாவட்டம் பல்லாவரம் அடுத்த திருநீர்மலையில் தமிழக வெற்றிகழக சார்பில் கழக தலைவர், தமிழக முதலமைச்சர் ஜோசப் விஜய் அவர்களின் 52 வது பிறந்தநாள் விழா முன்னிட்டு கழக பொதுசெயலாளரும், ஊரக வளர்ச்சித் துறை மற்றும் நீர்வளத் துறை அமைச்சருமான ஆனந்த் அவர்களின் வழிகாட்டுதலின்படி செங்கல்பட்டு வடக்கு மாவட்ட கழக துனைச் செயலாளர் டாக்டர் விஜய் அமிர்தராஜ் தலைமையில் 1552 பேருக்கு சமபந்தி அசைவ விருந்து திருநீர்மலை டெம்பிள் டவுன் பிரதான சாலை சந்திப்பில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்கு சிறப்பு அழைப்பாளராக பல்லாவரம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் காமாட்சி ஜெயகிருஷ்ணன் அவர்கள் கலந்து கொண்டு சமபந்தி விருந்து நிகழ்ச்சியை துவக்கி வைத்து பொதுமக்களுக்கு உணவு பரிமாறினார். இதில் மாவட்ட கழக இணை செயலாளர் அனகை மதன்குமார், மாவட்ட பொருளாளர் தம்பிராஜா, மாநில சட்ட ஆலோசனை அணி இனைச் செயலாளர் பூவேந்தன், திருநீர்மலை பகுதி செயலாளர் அஸ்வின், புகழ் மற்றும் 31வது வட்ட நிர்வாகிகள் பகுதி உட்பட ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

# குன்னூர் பிராவிடன்ஸ் கல்லூரி மற்றும் பீ மை படி அறக்கட்டளை இணைந்து நடத்திய ஹேக்கத்தான் போட்டி



நீலகிரி, ஜூன்.29-

குன்னூர் பிராவிடன்ஸ் மகளிர் தன்னாட்சிக் கல்லூரியும், பீ மை படி அறக்கட் டளையும் இணைந்து நடத்திய 'ஹேக்கத்தான் போட்டியின் இரண்டாம் கட்டம் வெற்றி கரமாக நடைபெற்றது. கல்லூரியின் வணிகவியல், கணிதவியல், கணினி பயன்பாட்டியல் நிசிகி மற்றும் தரவு அறிவியல் Data Science துறைகள் இணைந்து இந்த நிகழ்வை ஒருங்கிணைத்தன. நீலகிரி மற்றும் அதன் சுற்றுவட்டாரப் பகுதிகளைச் சேர்ந்த 6 இளம் கண்டுபிடிப்பாளர் அணிகள் தங்களின் தொழில்நுட்பத் திறன்களையும், புதுமையான திட்டங்களையும் இதில் காட்சிப்படுத்தினர்.

இன்னோவேட்டிவ் கேட்டலிஸ்ட், தினிஷா, வெப் ரேப்பர்ஸ், கிரீன் கார்டியன்ஸ், கோட் டுயோ மற்றும் திறல் ஆகிய ஆறு அணிகள் தங்களது படைப்புகளை வரிசையாகச் சமர்ப்பித்தனர். நடுவர்களாகப் பங்கேற்ற டேவிட் டி, பவித்ரா யுதிஸ்டர் மற்றும் ஹரிஷ் கண்ணன் ஆகியோர் மாணவர்களின் படைப்பாற்றலையும் தொழில்நுட்பத் திறனையும் பாராட்டினர்.

தீவிரப் பரிசீலனைக்குப் பிறகு, தலா 1 லட்சம் ரூபாய் தொடக்க முதலீட்டுத்தொகை (Seed Money) பரிசு பெறும் இரண்டு வெற்றியாளர் அணிகள் அறிவிக்கப்பட்டன:

டீம் வெப் ரேப்பர்ஸ் (KGISL தொழில்நுட்ப நிறுவனம்) பிரியங்கா ராஜு, சஹானா பாபு, செல்சியா குழந்தைராஜு வழிகாட்டி: நிதின் ஜே.பி.எஸ், டீம் எவரெஸ்ட் டீம் கோட் டுயோ ஸ்ரீ ராமகிருஷ்ணா மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரிமதிமித்ரா பி.ஆர், ஸ்வாதி கிருஷ்ணா எஸ்.பி, ரோகிதா எஸ், இனாஸ் பாத்திமா சி வழிகாட்டி: முரளி மேனன், நிறுவனர், பீமைபடி அறக்கட்டளை இப்போட்டியில் டிங்கர் ஹப் அமைப்பைச் சேர்ந்த குரியன், ஜாசிம், நந்தனா மற்றும் சிறப்பு அழைப்பாளர்கள் சங்கீதா, சமந்தா ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். மாணவர்களின் புதுமைப் படைப்புகள் மற்றும் தொழில்முனைவோர் திறனை ஊக்குவிக்கும் பிராவிடென்ஸ் கல்லூரியின் முயற்சியைப் பாராட்டி இந்த நிகழ்வு இனிதே நிறைவடைந்தது.



■ சிறப்பு மனு முகாம் மூலம் பொதுமக்களின் குறைகளை கேட்டறிந்து புகார் மனு மீது துரித நடவடிக்கை எடுத்து வரும் தேனி மாவட்ட காவல்துறையினர் 27.06.2026 தேனி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் K.S.பிரவீன் கௌதம், உத்தரவின் பேரில் தேனி மாவட்டத்தில் உள்ள அனைத்து காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பகுதியில் காவல் அதிகாரிகள் சிறப்பு மனு முகாம் நடத்தப்பட்டு பொதுமக்களின் குறைகளை கேட்டறிந்து புகார் மனு மீது உரிய விசாரணை செய்து துரித நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். சிறப்பு மனு முகாம் நடத்தப்பட்டு பொதுமக்களின் குறைகளை கேட்டறிந்து புகார் மனு மீது உரிய விசாரணை செய்து நடவடிக்கை எடுத்து வரும் தேனி மாவட்ட காவல்துறையினரின் செயல் பொதுமக்கள் மத்தியில் காவல்துறை நண்பனாகவும், நம்பிக்கையையும் ஏற்படுத்தி இருப்பதாக பொதுமக்கள் தங்கள் நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்து வருகின்றனர்.



■ செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் மாநகராட்சிக்கு உட்பட்ட 32வது வார்டு கடப்பேரி அங்கன்வாடி மையத்தில் நேற்று தேசிய போலியோ சொட்டு மருந்து சிறப்பு முகாமில் தாம்பரம் மாநகராட்சி மேயர் தாம்பரம் மாநகர தி.மு.கழக துணை செயலாளர் வசந்தகுமாரி கமலகண்ணன் அவர்கள் குழந்தைகளுக்கு போலியோ சொட்டு மருந்து வழங்கிய போது உடன் திமுக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்



■ திருப்பத்தூர் மாவட்ட அரசு மருத்துவமனை வளாகத்தில், பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத் துறை சார்பில், 5 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு போலியோ சொட்டு மருந்து வழங்கும் முகாமை, மாவட்ட வருவாய் அலுவலர் ஜெ.நாராயணன் அவர்கள், திருப்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர் டாக்டர்.நா.திருப்பதி, ஆகியோர் குழந்தைகளுக்கு போலியோ சொட்டு மருந்து வழங்கி தொடங்கி வைத்தனர். உடன் மாவட்ட சுகாதார அலுவலர் மரு. நா. கலு சிவலிங்கம், மாவட்ட தாய் சேய் நல அலுவலர் மரு.பியூலா, மருத்துவர்கள் மரு.பிரபாகர், மரு.செந்தில்குமார், ரோட்டரி சங்க நிர்வாகிகள் சுகாதார செவிலியர்கள், சுகாதாரத்துறை அலுவலர்கள், பணியாளர்கள் மற்றும் பலர் உள்ளனர்.

# ஆற்காடு நகர தவெக சார்பில் 10 லட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகள்



ஆற்காடு, ஜூன்.29-

ஆற்காடு பேருந்து நிலையத்தில் நேற்று முன்தினம் இரவு நடைபெற்ற தமிழக முதலமைச்சர் ஜோசப் விஜயின் பிறந்த நாளை முன்னிட்டு நகர தவெக சார்பில் ரூபாய் 10 இலட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை அமைச்சர் ஆர்.காந்தி ராஜ் வழங்கினார்.

இராணிப்பேட்டை மாவட்டம் ஆற்காடு பேருந்து நிலையத்தில் நேற்று முன்தினம் இரவு நடைபெற்ற தமிழக முதல்வரும் தமிழக வெற்றிகழக தலைவருமான ஜோசப் விஜயின் 52 வது பிறந்த நாளை முன்னிட்டு மாபெரும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நடைபெற்றது.

இந்நிகழ்ச்சிக்கு ஆற்காடு நகரச் செயலாளர் வினோத் தலைமை தாங்கினார்.நகர செயற்குழு உறுப்பினர் ருத்திரன், வெங்கடேஷ் வரவேற்புரை ஆற்றினார். ஏ.என்.எஸ்.பிரேம் குமார்,என். விஸ்வநாதன் முன்னிலை வகித்தார்கள்.

இந்நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளராக தமிழக கூட்டுறவுத்துறை அமைச்சர் ஆர்.காந்தி ராஜ், மேற்கு மாவட்ட செயலாளர் விஜய் மோகன் ஆகியோர் கலந்து கொண்டு 1000 க்கும் மேற்பட்ட பொதுமக்களுக்கு தையல் மிஷின், மளிகை பொருட்கள், சலவைப் பெட்டி, மின்சார சலவை பெட்டி போன்ற 10 லட்ச ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை வழங்கினர்.மேலும் 12 ஆம் வகுப்பு மற்றும் 10ம் வகுப்பு தேர்வில் மாவட்ட அளவில் அதிக மதிப்பெண்களை பெற்ற பள்ளி மாணவ மாணவிகளுக்கு கல்வி உதவிதொகையும், 52 ஆட்டோ ஓட்டுனர்களுக்கு சீருடைகளையும் வழங்கினர்.

இதற்கு முன்னதாக மாணவிகளின் பரதநாட்டிய கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சியில் ராணிப்பேட்டை சட்டமன்ற உறுப்பினர் தாஹிரா, சோளிங்கர் சட்டமன்ற உறுப்பினர் கபிலன், மாவட்ட, நகர, ஒன்றிய கழக நிர்வாகிகள் மற்றும் 1000க்கும் மேற்பட்ட பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

இதில் இறுதியாக நகர செயற்குழு உறுப்பினர் ஹேம்நாத் நன்றி கூறினார்..

# பம்மலில் நம் பள்ளி நம் வீடு உதவும் நண்பர்கள் சங்கமம் சார்பில் 5 ஆம் ஆண்டு அரசு ஆதிதிராவிடர் மேல்நிலைப்பள்ளி மாணவர்களுக்கு கல்வி ஊக்க தொகை மற்றும் பாராட்டு சான்றிதழ் வழங்கும் விழா



பம்மல், ஜூன்.29-

செங்கல்பட்டு மாவட்டம் பல்லாவரம் அடுத்த பம்மலில் நம் பள்ளி நம் வீடு உதவும் நண்பர்கள் சங்கமம் சார்பில் 5 ஆம் ஆண்டு அரசு ஆதிதிராவிடர் மேல்நிலைப்பள்ளி மாணவர்களுக்கு கல்வி ஊக்க தொகை மற்றும் பாராட்டு சான்றிதழ் வழங்கும் விழா சென்னை யுடே குரூப் ஆப் கம்பெனி, மணிநேயர் உதயகுமார் தலைமையில் காவல் ஆய்வாளர் விநாயகம் முன்னிலையில் இரட்டை பிள்ளையார் கோவில் அருகே உள்ள தனியார் மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்கு சிறப்பு விருந்தினராக திருக்குறள் பட தயாரிப்பாளர் மதுரை ராஜேந்திர ஐயா, சமூக செயல்பாட்டாளர் செம்பாக்கம் அண்ணாமலை, செந்தில், கார்த்திகேயன், தொழிலதிபர் சரவணராஜ், ஆங்கர் லெதர் அருன், புதுவை முத்தமிழ் சங்க நிறுவனர் ஆரா, சதீஷ், குழந்தைகளின் பாதுகாப்பு போராளி சஞ்சனா ஆகியோர் கலந்து கொண்டு அதிகமதிப்பெண் பெற்ற மாணவ, மாணவிகளுக்கு 2000 முதல் 5000 ரூபாய் வரை காசோலை மற்றும் சான்றிதழ் வழங்கினர். மேலும் சிறந்த ஆசிரியர்களுக்கு விருதுகள் வழங்கபட்டும் கலந்து கொண்ட விருந்தினர்களுக்கு அப்துல்கலாம் நினைவு பரிசு வழங்கபட்டது. முன்னதான மாணவர்களின் கலை நிகழ்ச்சி நடைபெற்றது குறிப்பிடதக்கது.



■ தமிழக வெற்றிக் கழக தலைவர் சி.ஜோசப் விஜய் மற்றும் கழகப் பொதுச் செயலாளர் புஸ்ஸி ஆனந்த் (எம்.எல்.ஏ) ஆகியோரின் அறிவுறுத்தலின்படியும், சிவகங்கை தெற்கு மாவட்ட செயலாளர் எஸ்.முத்து பாரதி ஆலோசனையின்படியும், மானாமதுரை சட்டமன்ற உறுப்பினர் டி.இளங்கோவன் வழிகாட்டுதலின்படியும், மானாமதுரை ஒன்றிய செயலாளர் பா.சரண்ராஜ் ஆலோசனையின்படியும் நேற்று (28.06.2026) மக்கள் நலப்பணி மேற்கொள்ளப்பட்டது. மானாமதுரை மேற்கு ஒன்றியத்திற்கு உட்பட்ட பஞ்சாயத்து கிராமங்களில் இன்று நடைபெற்ற 13 போலியோ மருத்துவ முகாம்களுக்கு, தமிழக வெற்றிக் கழகத்தின் சார்பாக மதிய உணவு வழங்கப்பட்டது. இதற்கான ஏற்பாடுகளை மானாமதுரை மேற்கு ஒன்றிய இணைச் செயலாளர் ஜி.முருகானந்தம் செய்திருந்தார்.





## தடுப்பணை உயரத்தை கைவிடுங்கள்! : 500 கிராமங்களை காக்க விவசாயிகள் போராட்டம் தீவிரம்!

மதுரை, ஜூன்.29

மதுரை மாவட்டம் பாலாற்றின் குறுக்கே சூரப்பட்டி கிராமத்தில் தனியார் குடிநீர் விற்பனை ஆலைக்கு ஆதரவாக கட்டப்பட்டு வரும் தடுப்பணையின் உயரத்தை கைவிட வேண்டும் என்று வலியுறுத்தி மூன்று மாவட்டங்களைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான விவசாயிகள் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இது தொடர்பாக தமிழ்நாடு அனைத்து விவசாயிகள் சங்கங்களின் ஒருங்கிணைப்பு குழு மாநிலத் தலைவர் பி.ஆர். பாண்டியன் அணை கட்டுமானப் பகுதியை நேரில் பார்வையிட்டார்.

பின்னர் அவர் கூறியதாவது:

சூரப்பட்டி பகுதியில் கட்டப்பட்டு வரும் தடுப்பணையால் மதுரை, மேலூர், சிவகங்கை, ராமநாதபுரம் உள்ளிட்ட மாவட்டங்களில் உள்ள 500க்கும் மேற்பட்ட கிராமங்கள் பாதிக்கப்படும் அபாயம் இருப்பதாக தெரிவித்தார். மேலும், 600க்கும் மேற்பட்ட ஏரிகள் மற்றும் குளங்களுக்கு நீர் செல்லும் வாய்ப்பு தடைபட்டு, ஒரு லட்சம் ஏக்கருக்கும் அதிகமான விளைநிலங்கள் பாலைவனமாக மாறும் நிலை ஏற்படும் என்றும் எச்சரித்தார்.

இந்த தடுப்பணை அமைப்பதற்கு முன்பு சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர்களிடம் தடையின்மைச் சான்று பெறப்படவில்லை என்றும் அவர் குற்றம்சாட்டினார்.

எனவே, தளமட்டச் சுவருக்கு மேலாக 6 அடி உயரத்தில் தடுப்பணை அமைக்கும் திட்டத்தை முழுமையாக கைவிட்டு, விவசாயிகளின் ஒப்புதலுடன் தளமட்டச் சுவரை ஒரு அடி மட்டுமே உயர்த்தி அமைக்க வேண்டும் என்றும், அதுவரை தற்போதைய தடுப்பணைப் பணிகளை உடனடியாக நிறுத்தி வைக்க வேண்டும் என்றும் அரசுக்கு பி.ஆர். பாண்டியன் வலியுறுத்தினார்.



## ஆன்லைன் ஆப் மூலம் போதை மாத்திரை விற்பனை: துப்பாக்கி, ஆயுதங்களுடன் 6 பேர் கைது!

மதுரை, ஜூன்.29

மதுரை மாவட்டம் செக்கானூரணி காவல் நிலைய எல்லைக்குட்பட்ட வடக்கம்பட்டி சாலையில் காவல்துறையினர் தீவிர ரோந்து பணியில் ஈடுபட்டிருந்தபோது, சந்தேகத்திற்கிடமாக நின்றிருந்த ஒரு காரை சோதனையிட்டனர்.

அதில் இருந்த ராமநாதபுரத்தைச் சேர்ந்த சிபியோன்ராஜ் (20), மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த லோகபாண்டி (21), நந்தகுமார் (21), தேனவன் (20), சுபாஷ் (25), விஷால் (19) ஆகிய 6 பேரை பிடித்து விசாரணை நடத்தியதில், தடை செய்யப்பட்ட போதை மாத்திரைகளை ஆன்லைன் செயலி (கிஜீஜீ) மூலம் ஆர்டர் செய்து, கூரியர் வழியாக பெற்று விற்பனை செய்து வந்தது தெரியவந்தது.

இதையடுத்து, சட்டவிரோதமாக போதை மாத்திரைகள் மற்றும் பயங்கர ஆயுதங்களை வைத்திருந்த குற்றச்சாட்டில் 6 பேரையும் போலீசார் கைது செய்தனர்.

அவர்களிடமிருந்து 680 போதை மாத்திரைகள், ஒரு ஏர் பிஸ்டல், 2 அடி நீளமுள்ள 11 வாள்கள், ஒரு கார், ஒரு இருசக்கர வாகனம், 6 செல்போன்கள் மற்றும் ஒரு ஆப்பிள் லேப்டாப் ஆகியவை பறிமுதல் செய்யப்பட்டன.

போதைப்பொருள் கடத்தல் மற்றும் ஆயுத கலாச்சாரத்தில் ஈடுபடுபவர்கள் மீதும், அவர்களுக்கு துணைபுரிபவர்கள் மீதும் கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். மேலும், அவர்களின் அசையும் மற்றும் அசையா சொத்துகளும் முடக்கப்படும் என மதுரை மாவட்ட காவல்துறை எச்சரித்துள்ளது.

போதைப்பொருள் தொடர்பான ரகசிய தகவல்களை பொதுமக்கள் 94981 81206 என்ற எண்ணில் தெரிவிக்கலாம் என்றும் காவல்துறை அறிவித்துள்ளது.

## காவேரிப்பட்டினத்தில் மொகரம் திருவிழா நிறைவு: பஞ்சா சங்கம நிகழ்வில் திரண்ட ஆயிரக்கணக்கான பக்தர்கள்; புலி வேடம் அணிந்து நேர்த்திக்கடன் செலுத்திய இளைஞர்கள்

கிருஷ்ணகிரி, ஜூலை 29-

கிருஷ்ணகிரி மாவட்டம் காவேரிப்பட்டினம் மேல் மக்கான் மற்றும் சின்ன மக்கான் பகுதிகளில் 150 ஆண்டுகளுக்கும் மேலாக பாரம்பரியமாக நடைபெற்று வரும் மொகரம் திருவிழா 10 நாட்கள் சிறப்பாக நடைபெற்று, பஞ்சா சங்கம நிகழ்வுடன் கோலாகலமாக நிறைவடைந்தது.

திருவிழாவின் 8ஆம் நாள் நிகழ்ச்சியாக குண்டம் இறங்கும் நிகழ்ச்சி, இன்னிசைக் கச்சேரி மற்றும் அன்னதானம் நடைபெற்றது. தொடர்ந்து 10ஆம் நாள் நிறைவு விழாவையொட்டி நேற்று மாலை 5 மணியளவில் மேல் மக்கான் பஞ்சா அல்லா சாமியும், சின்ன



மக்கான் பஞ்சா அல்லா சாமியும் தேசி செட்டி தெரு சந்திப்பில் சங்கம நிகழ்வில்( தலைக்கூடும் ) ஒன்றிணைந்தன. இந்த புனித நிகழ்வை காணவும், தரிசனம் செய்து வழிபடவும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் திரண்டனர்.

பக்தர்கள் மிளகு, முத்துக்கொட்டை, உப்பு உள்ளிட்டவற்றை பஞ்சா மீது தூவி தங்களது நேர்த்திக்கடனை செலுத்தினர். மேலும் இஸ்லாமிய இளைஞர்கள் கோல்சண்டை, கத்திச் சண்டை, புலி வேடம், கரி வேடம் உள்ளிட்ட பாரம்பரிய நிகழ்ச்சிகளில் பங்கேற்று தங்களது நேர்த்திக்கடனை நிறைவேற்றினர். இந்நிகழ்வுகள் பக்தர்களை வெகுவாகக் கவர்ந்தன.

இந்நிகழ்ச்சி மேல் மக்கான் கமிட்டியினரான காதர் பாட்ஷா, மசால் பாபு, அக்பர், இனாயத், சாதிக் பாஷா, அஜுஸ் ஆகியோரின் ஏற்பாட்டில், தொழிலதிபர்கள் ஜே.கே. எஸ். பாபு மற்றும் சாஜித் ஆகியோரின் தலைமையில் நடை பெற்றது. இதில் முகமது இத்ரீஸ், செய்தியாளர் மகபூப் பாஷா, மிட்டு, அப்துல், யாசின் உள்ளிட்ட 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட இஸ்லாமியர்களும், பொதுமக்களும் கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தனர்.

மேல் மக்கான், சின்ன மக்கான் மற்றும் விழாக்குழுவினர் திருவிழாவிற்கான அனைத்து ஏற்பாடுகளையும் சிறப்பாக செய்திருந்தனர். பாதுகாப்பு ஏற்பாடுகளை காவல் ஆய்வாளர் சங்கர் தலைமையில் காவேரிப்ப ட்டினம் சப் இன்ஸ்பெக்டர்கள் மற்றும் 50க்கும் மேற்பட்ட காவல் துறையினர் சிறப்பாக மேற்கொண்டனர்.



■ கிருஷ்ணகிரி மாவட்டம் காவேரிப்பட்டினம் அருகே உள்ள பொன்னன் நகர்,அருள்மிகு நந்திகேஸ்வரர் திருக்கோவிலில் சனிக்கிழமை நடைபெற்ற பிரதோஷ வழிபாட்டில் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு சுவாமி தரிசனம் செய்தனர். மூலவருக்கு சிறப்பு அபிஷேகம், அலங்காரம் மற்றும் மகா தீபாராதனை நடைபெற்றது. தொடர்ந்து பக்தர்களுக்கு பிரசாதம் வழங்கப்பட்டது.



## அவசரம் வேண்டாம் என வைகோவிடம் முறையிட்டு கண்ணீர்: ராஜேந்திரன் எம்எல்ஏ தகவல்

தென்காசி, ஜூன்.29–

“கட்சி, சாதி, மதம் கடந்து வெற்றிபெறச் செய்த கடையநல்லூர் தொகுதி மக்கள் நாள்தோறும் என்னிடம் வெளிப்படுத்தி வரும் உணர்வை மதித்தும், வைகோ மீதோ, என் மீதோ களங்கம் படர்வதைத் தவிர்க்கும் பொருட்டும் பதவி விலகல் என்ற முடிவை மேற்கொள்ள வேண்டாம் என்று வைகோவிடம் தெரிவித்தேன்” என கடைய நல்லூர் எம்எல்ஏ தி.மு.ராஜேந்திரன் தெரிவித் துள்ளார்.

திமுக கூட்டணியில் இருந்து விலகுவதாக சென்னையில் நேற்று நடைபெற்ற மதிமுக பொதுக்குழு கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது. இந்நிலையில், தென்காசி மாவட்டம், கடையநல்லூர் தொகுதியில், உதயசூரியன் சின்னத்தில் போட்டியிட்டு வெற்றிபெற்ற மதிமுக வேட்பாளர் தி.மு.ராஜேந்திரன், முகநூல் பக்கத்தில் கூறியிருப்பதாவது:மதிமுக அலுவலகமான தாயகத்தில் ஜூன் 26ம் தேதி வைகோவை சந்தித்து பேசினேன். பதவி விலகல் என்ற முடிவை மேற்கொள்ள வேண்டாம் என்று தெரிவித்தேன்.

சட்டப்பேரவையில் எனது செயல்பாடுகள் தகுதி நீக்கத்துக்கு வழிவகுத்தால் மகிழ்ச்சியுடன் பதவியைத் துறந்து மக்களிடம் முறையிடுவோம் என்றும், இப்போது அவசரம் வேண்டாம் என்றும் குறைந்தபட்சம் 6 மாதம் பொறுத்திருப்போம் என்றும் கூறினேன். கூட்டணி குறித்து எடுக்கும் முடிவை மதிப்பதாகவும் இன்னும் சில பல செய்திகளையும் வைகோவிடம் கூறி கண்ணீருடன் முறையிட்டேன்.

அதன் பின்னர், இரவில் வைகோவிடம் இருந்து கிடைத்த உத்தரவை, பொதுக்குழுவில்என்னால் செயல்படுத்த இயலாது என்பதால், பொதுக்குழுவில் நான் கலந்து கொள்ளவில்லை. 42 ஆண்டுகளாக வைகோ மீது நான் வைத்திருக்கும் அன்பும், விசுவாசமும் உண்மையானது. அதேபோல், வாக்களித்த மக்கள் பெருமைப்படும் வகையில் எனது செயல்பாடுகள் இருக்கும் என்று தொகுதி மக்களிடம் ஏற்படுத்தி வைத்திருக்கும் நம்பிக்கையும் உண்மையானது. மீதமுள்ள நம் வாழ்வில் எவ்வித களங்கமும் சுமக்க வேண்டாம் என்பது என் கருத்து. இந்த கருத்துகள் வைகோவின் நலனையும் உள்ளடக்கியது.

## போதைப் பொருள் விவகாரம்: அமைச்சர் சரத்குமாரை பதவி நீக்கக் கோரி திமுக ஆர்ப்பாட்டம் அறிவிப்பு

**சென்னை, ஜூன்.29–**

பொது இடத்தில் போதைப் பொருள் பயன்படுத்தியது போல் வீடியோ வெளியான விவகாரத்தில் தவெக அமைச்சர் சரத்குமாரை பதவி நீக்கம் செய்ய வலியுறுத்தி திமுக மாணவரணி ஆர்ப்பாட்டம் அறிவித்துள்ளது.

இதுகுறித்து திமுக வெளியிட்ட அறிக்கையில், ‘இளைஞர்களையும் சமுதாயத்தையும் சீரழிக்கும் போதைப் பொருட்கள் பயன்பாட்டைத் தடுத்து நிறுத்துவதோடு, அதற்கு எதிரான விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டியது சமூகப் பொறுப்புள்ள ஒவ்வொருவரின் கடமை. ஆனால், ஆளும் த.வெ.க. அரசில் இடம்பெற்றுள்ள அமைச்சர்களின் செயல்பாடுகள் அவ்வாறானதாக இல்லை.

குறிப்பாக, மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் டி.சரத்குமார், போதைப் பொருளைப் பயன்படுத்துவது போன்ற வீடியோ ஒன்று, போதைப் பொருள் ஒழிப்பு நாளன்று வெளியாகி சர்ச்சையை உருவாக்கியுள்ளது. அமைச்சரும் அதற்கு விளக்கமளிக்கிறேன் பேர்வழி என்று, த.வெ.க.வின் பாரம்பரியப்படி, குழந்தைக்குப் பின்னால் ஒளிந்துகொண்டு அரசியல் செய்வதாகவே தோன்றுகிறது.

அவர் போதைப் பொருள் பயன்படுத்தினரா இல்லையா என்று அவரைக் காக்க பட்டிமன்றம் நடத்துவதைவிட, பொதுவெளியில் போதைப் பொருட்களைப் பயன்படுத்துவது போல் வீடியோ எடுத்து, அதனை “ஜிலீஞுரீ லிவீயிமீ விஷீனீமீஸீமீ” என்று ரீல்ஸ் ஆக வெளியிட்டு தவறான செயலைச் செய்ய இளைஞர்களை ஊக்குவிக்கும் அவரது செயல் கடுமையாகக் கண்டிக்கத்தக்கது.

எனவே, இத்தகைய ஒருவர் அமைச்சரவையில் தொடர்வது, எவ்விதத்திலும் தமிழ்நாட்டு இளைஞர்களுக்கு நன்மை தரக்கூடியது அல்ல என்பதால், மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் சரத்குமாரை உடனடியாகப் பதவிநீக்கம் செய்ய வலியுறுத்தி, தி.மு.க. மாணவர் அணிச் சார்பில் 29062026 (திங்கட்கிழமை) அன்று கழக மாவட்டத் தலைநகரங்களில் “மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்” நடைபெறும்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் மாவட்ட ஒன்றிய நகர பேரூர் கழக மாணவரணி நிர்வாகிகள் மற்றும் மாணவர்கள் பெருந்திரளாகக் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

மேலும், “பூமியில் இருக்குது மூனு பங்கு தண்ணிடா, தண்ணிய அடிப்பதில் தப்பு ஒன்னும் இல்லடா” “பத்தாது பாட்டில் நான் குடிக்க, அண்டால கொண்டா சியர்ஸ் அடிக்க” போன்ற தத்துவப் பாடல்கள் மூலம் ரசிகக் கூட்டத்தை உருவாக்கிய முதல்வரின் அமைச்சரவையில் உள்ள அமைச்சர்கள், இன்னுமும் ரசிக மனநிலையிலேயே இருக்கின்றனர்.

அதிலும் அமைச்சர் ஜெகதீஸ்வரி அவர்களது கையில் முதல்வர் விஜய் புகைப்பிடிப்பது போன்ற “டாட்டூ”வைப் போட்டுக்கொண்டு, அவரது தத்துவப் பாடல்களை இளைஞ ர்களிடம் கொண்டு சேர்க்கும் பணியைச் செய்து கொண்டிருக்கிறார். இதனையெல்லாம் கண்டிக்க வேண்டிய முதல்வரோ, இதையெல்லாம் ரசிக்கின்ற மனநிலையில் தேங்கி நிற்கிறார் என்பதை வேதனையோடு பதிவு செய்து, அமைச்சர்களின் இத்தகைய மாண்பற்ற போக்குகளை முதல்வர் கண்டித்து இதற்கெல்லாம் முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என தி.மு.க. மாணவரணி வலியுறுத்துகிறது.’ எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## “ஸ்டாலினும், பழனிசாமியும் சேர்ந்து ஆட்சி அமைக்க இப்போதும் முயல்கின்றனர்” நிர்மல் குமார்

**மதுரை, ஜூன்.29–**

“ஒவ்வொரு நாளும் மு.க.ஸ்டாலின், பழனிசாமி சேர்ந்து ஆட்சி அமைக்க முயற்சிக்கின்றனர்” என அமைச்சர் நிர்மல் குமார் குற்றம் சாட்டினார்.

மேலூரில் முதல்வர் விஜய்யின் பிறந்தநாளையொட்டி மாட்டு வண்டி பந்தயம் நடந்தது. இப்போட்டியை அமைச்சர் சி.டி.ஆர். நிர்மல் குமார் தொடங்கி வைத்து செய்தியா ளர்களிடம் கூறியதாவது: முன்னாள் அமைச்சர் எ.வ.வேலு செய்த ஊழல்கள் தொடர்பாக கிடைத்த ஆதாரப்பூர்வ ஆதாரங்கள் அடிப்படையில் லஞ்ச ஒழிப்பு போலீஸ் வழக்கு பதிந்து விசாரணை செய்கிறது. சோதனை நடந்த இடங்களில் பல்லாயிக்கணக் கான கோடி ரூபாய் மக்கள் பணம் ஊழலாக கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.

திமுகவும், அதிமுகவும் இணைந்து ஆட்சி அமைக்க இன்று காலையில் கூட முயற்சித்துள்ளனர். ஒவ்வொரு நாளும் முக.ஸ்டாலினும், உதயநிதியும், பழனிசாமியும் சேர்ந்து ஆட்சி அமைக்க முயற்சிக்கின்றனர்.



பெரும்பான்மையான மக்கள் விஜய் வரவேண்டும் என, வாக்களித்துள்ளதால் குறுக்கு வழியில் யாரையாவது விலைக்கு வாங்கலாமா என, குதிரை பேரத்தில் ஸ்டாலின் உதயநிதி , அவரது மாப்பிள்ளை, பழனிசாமி, அவரது மகன் சேர்ந்து ஈடுபடுகின்றனர்.

இதன் வெளிப்பாடு தான் கூட்டணியை விட்டு, அவர்களை விட்டு கூட்டணிக் கட்சியினர் வெளி யேற முக்கிய காரணம். மதிமுக எம்எல் ஏக்களை அவர்கள் கட்சி கூட்டத்திற்கு போகவிடாமல் செய்தது யார்? அவர்கள் ஆட்சியில் இருந்த போது, என்ன வெல்லாம் செய்திருப்பார்கள். கூட்டணியில் இருந்த விசிக உள்ளிட்ட பல பேரை பொது நிகழ்ச்சிகளில் பங்கேற்க தடை விதித்து திமுக மிரட்டியது. இப்போதும் அந்த வேலையை செய்கின்றனர். ஆனால் திமுகவில் பல எம்எல்ஏக்கள் உடன்படவில்லை. அவர்கள் ராஜினாமா செய்தாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை.

இரண்டு குடும்பத்தின் சொத்துக்களை பாதுகாக்க,, ஊழலை மறைக்கவே இரண்டு பேரும் சுயநலமாக முடிவெடுக்கின்றனர். அவர்கள் ஜனநாயக படுகொலை செய்யவும் தயாராக இருக்கின்றனர். இதற்கான முயற்சி இந்த நிமிடம் வரை நடக்கிறது.

இயற்கை வளங்களை கொள்ளை அடித்தவர்களை இந்த அரசு மன்னிக்காது. அதிமுக, திமுகவின் பேராசையால் பல இயற்கை வளங்கள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன. மதுரையை சுற்றி மலையே இல்லை. பாதியை வெட்டி வெளியே போட்டது போல் உள்ளது. ஊழல், இயற்கை வளங்களை கொள்ளையடித்த வர்களுக்கு எந்த மன்னிப்பு இருக்காது. கிரானைட் வழக்குகளில் அரசு முழு ஒத்துழைப்பு அளித்து விரைவாக முடிக்க நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாறு கூறினார்.



# போலியோ இல்லா தமிழகம் நோக்கி... மதுரையில் தேசிய போலியோ சொட்டு மருந்து முகாமை தொடங்கி வைத்த அமைச்சர் சி.டி.ஆர். நிர்மல் குமார்"

மதுரை, ஜூன்.29-

மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனையில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையின் பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்து இயக்ககம் சார்பில் நடைபெற்ற தேசிய போலியோ சொட்டு மருந்து சிறப்பு முகாமை, தமிழக எரிசக்தி மற்றும் சட்டத்துறை அமைச்சர் சி.டி.ஆர். நிர்மல் குமார் தொடங்கி வைத்து, குழந்தைகளுக்கு போலியோ சொட்டு மருந்து வழங்கினார். பின்னர் முகாமின் செயல்பாடுகளை அமைச்சர் நேரில் பார்வையிட்டு, மருத்துவப் பணியாளர்களின் ஏற்பாடுகள் மற்றும் குழந்தைகளுக்கு வழங்கப்பட்டு வரும் சேவைகள் குறித்து கேட்டறிந்தார். அனைத்து தகுதி யுடைய குழந்தைகளுக்கும் தவறாமல் போலியோ சொட்டு மருந்து வழங்கப்பட வேண்டும் என அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார். இந்நிகழ்ச்சியில் மதுரை வடக்கு சட்டமன்ற உறுப்பினர் அ. கல்லாணை, மதுரை தெற்கு சட்டமன்ற உறுப்பினர் எம்.எம். கோபிசன், மாநகராட்சி ஆணையாளர் கௌரவ் குமார், மருத்துவத் துறை அதிகாரிகள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

# போலியோ சொட்டு மருந்து வழங்கும் முகாமினை மாவட்ட வருவாய் அலுவலர் .ப.ராஜகுமார் வழங்கி தொடங்கி வைத்தார்

தேனி ஜூன் 29-

தேனி மாவட்டம் பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்துத்துறை சார்பில் போலியோ சொட்டு மருந்து வழங்கும் முகாமினை பெரியகுளம் ஊராட்சி ஒன்றியம் லட்சுமிபுரம் அரசு துணை சுகாதார நிலையத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் .ப.ராஜகுமார் , பெரியகுளம் சட்டமன்ற உறுப்பினர் .க.சபரி ஐங்கரன் அவர்கள் மற்றும் கம்பம் நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையத்தில் மாவட்ட வருவாய் அலுவலர், கம்பம் சட்டமன்ற உறுப்பினர் .பி.எல்.ஏ.ஜெகநாத் மிஸ்ரா அவர்கள் ஆகியோர் குழந்தைகளுக்கு போலியோ சொட்டு மருந்தினை வழங்கி தொடங்கி வைத்தார்கள்.



போலியோ நோய் இல்லாத நிலையை உருவாக்க வேண்டும் என்ற நோக்கத்தில் நாடு முழுவதும் குழந்தைகளுக்கு சொட்டு மருந்து வழங்கப்பட்டு வருகிறது. தேனி மாவட்டத்தில் உள்ள அனைத்து துணை சுகாதார நிலையங்கள், ஆரம்ப சுகாதார நிலையங்கள், அரசு மருத்துவமனைகள், அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை, அங்கன்வாடி மையங்கள், தேர்ந்தெடுக்கப்பட்ட பள்ளிகள், பேருந்து நிலையங்கள், இரயில் நிலையம், பொதுமக்கள் அதிகம் கூடும் இடங்களான சந்தைகள், கோயில்கள், தேவாலயங்கள், பள்ளிவாசல்கள், சுற்றுலா தலங்கள், குழந்தைகள் நல மருத்துவமனைகள் மற்றும் மாவட்ட எல்லை சோதனைச் சாவடிகளில் (Border Area Check Post) மாலை 5 மணி வரை சொட்டு மருந்து வழங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. இப்பணிக்காக 3619 களப்பணியாளர்கள் ஈடுபட்டுள்ளனர்.

தேனி மாவட்டத்தில் 5 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கான போலியோ சொட்டு மருந்து வழங்கும் முகாம் 902 மையங்களில் நடைபெறுகிறது. இதில் 86,634 குழந்தைகளுக்கு போலியோ சொட்டு மருந்து கொடுப்பதற்காக நடவடிக்கைகள் மேற்கொள் ளப்பட்டுள்ளது. இந்நிகழ்வில் துணை இயக்குநர் (சுகாதாரப் பணிகள்) மரு.வரதராஜன், பெரியகுளம் வருவாய் கோட்டாட்சியர் (பொ) கவிதா, வட்டாட்சியர் (பெரியகுளம்) .மருதுபாண்டி, வட்டார மருத்துவ அலுவலர்கள் .முருகன் (கம்பம்), கோமதி (பெரியகுளம்) உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



# முதலமைச்சர் தளபதி விஜய் பிறந்தநாளை முன்னிட்டு அரசு பெண்கள் சமூகநீதி விடுதியில் தூய்மைப் பணி

மானாமதுரை, ஜூன்.29-

தமிழக முதலமைச்சரும், தமிழக வெற்றிக் கழகத் தலைவருமான தளபதி விஜய் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு, மானாமதுரை அரசு பெண்கள் சமூகநீதி விடுதியில் தூய்மைப் பணி மேற்கொள்ளப்பட்டது.

பெற்றோர் மற்றும் விடுதி காப்பாளர்களின் கோரிக்கையை ஏற்று, பெண்கள் பாதுகாப்பு மற்றும் சுகாதாரமான சூழலை உறுதி செய்யும் வகையில், முதலமைச்சருக்கு பிறந்தநாள் பரிசாக இந்த சமூகப் பணி மேற்கொள் ளப்பட்டதாக நிர்வாகிகள் தெரிவித்தனர். சிவகங்கை தெற்கு மாவட்டச் செயலாளர் முத்துபாரதி மற்றும் மானாமதுரை சட்டமன்ற உறுப்பினர் இளங்கோவன் ஆகியோரின் ஆலோசனைப்படி, சிவகங்கை தெற்கு மாவட்ட தகவல் தொழில் நுட்ப அணி அமைப்பாளர் பாலாஜி மற்றும் மானாமதுரை மேற்கு ஒன்றியச் செயலாளர் சரண்ராஜ் ஆகியோரின் வழிகாட்டுதலில், மானாமதுரை மேற்கு ஒன்றிய தகவல் தொழில் நுட்ப அணி அமைப்பாளர் பூவேஸ் ராஜா தலைமையில், இணை அமைப்பாளர் சபரிராஜன் மற்றும் கழக உறுப்பினர் ஆனந்த் ஆகியோர் இந்த தூய்மைப் பணியை மேற்கொண்டனர்.





இந்த சமூக சேவைப் பணிக்கு விடுதி நிர்வாகம் மற்றும் பொதுமக்கள் பாராட்டு தெரிவித்தனர்.





# மதுரையில் விதிமீறிய காற்று ஒலிப்பான்கள் அகற்றம்; ரூ.85 ஆயிரம் அபராதம்

மதுரை, ஜூன்.29-

மதுரை மாநகர் காவல்துறையினர் பெரியார், ஆரப்பாளையம் மற்றும் மாட்டுத்தாவணி பேருந்து நிலையங்களில் நடத்திய சிறப்பு சோதனையில், மோட்டார் வாகனச் சட்ட விதிகளை மீறி அதிக சத்தத்துடன் பயன்படுத்தப்பட்ட காற்று ஒலிப்பான்கள் (Air Horn) அகற்றப்பட்டன.

மொத்தம் 85 வாகனங்களில் பொருத்தப்பட்டிருந்த விதிமீறிய ஒலிப்பான்கள் பறிமுதல் செய்யப்பட்டு, ஒவ்வொரு வாகனத்திற்கும் ரூ.1,000 வீதம் மொத்தம் ரூ.85 ஆயிரம் அபராதம் விதிக்கப்பட்டது.

காவல் ஆணையர் ராஜேந்திரன் (ஐபிஎஸ்) உத்தரவின்படி, காவல் துணை ஆணையர் (போக்குவரத்து) வனிதா மேற்பார்வையில் தெற்கு போக்குவரத்து காவல் ஆய்வாளர் தங்கமணி தலைமையில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. வட்டார போக்குவரத்து ஆய்வாளர் மாணிக்கம் மற்றும் மாசு கட்டுப்பாட்டு வாரிய அதிகாரி நித்யா ஆகியோரும் சோதனையில் பங்கேற்றனர்.

அதிக சத்தம் எழுப்பும் ஒலிப்பான்கள் பொதுமக்கள், முதியோர், குழந்தைகள் மற்றும் நோயாளிகளுக்கு பாதிப்பை ஏற்படுத்துவதோடு, சாலை விபத்துகளுக்கும் காரணமாக இருப்பதால் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாக காவல்துறையினர் தெரிவித்தனர்.





# சிங்கப்பெண் அதிரடிப்படை சார்பில் பணிபுரியும் மகளிருக்கு பாதுகாப்பு விழிப்புணர்வு

திருப்பத்தூர், ஜூன்.29-

திருப்பத்தூர் மாவட்ட காவல்துறையின் "சிங்கப் பெண் அதிரடிப்படை" சார்பில், ஆம்பூரில் உள்ள ஃபரிதா ஷூ நிறுவனம் மற்றும் வாணியம்பாடியில் உள்ள ஹிஜாஸ் குரோடாக்ளோஸ் நிறுவனம் ஆகியவற்றில் பணிபுரியும் பெண்களுக்கு பாதுகாப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் பெண்களின் தனிப்பட்ட பாதுகாப்பு, இணையவழி மற்றும் வங்கி மோசடிகளில் இருந்து தங்களைத் தற்காத்துக் கொள்ளும் வழிமுறைகள், பெண்களுக்கு எதிரான குற்றங்களைத் தடுப்பது மற்றும் அவசரகாலங்களில் 100, 1091 என்ற பிரத்யேக உதவி எண்ணை எந்த நேரத்திலும் தொடர்பு கொள்ளலாம் என்றும் அறிவுறுத்தப்பட்டது.





குன்னூர் தாலுகா வெலிங்டன் கண்டோண்மென்ட் பகுதிக்கு உட்பட்ட

# ஜெயந்திநகர் அங்கன்வாடி மையத்தில், போலியோ சொட்டு மருந்து வழங்கும் முகாம்

குன்னூர், ஜூன்.29-

குன்னூர் தாலுகா வெலிங்டன் கண்டோண்மென்ட் பகுதிக்கு உட்பட்ட ஜெயந்திநகர் அங்கன்வாடி மையத்தில், போலியோ சொட்டு மருந்து வழங்கும் முகாம் நடைபெற்றது. இந்த முகாமில் 5 வயதிற்கு உட்பட்ட குழந்தைகளுக்கு போலியோ சொட்டு மருந்து அளிக்கப்பட்டது. இந்த முகாம் நேற்று காலை 7 மணிக்கு துவங்கி மாலை 5 மணி வரை நடைப்பெற்றது.இம்முகாமில் ஆரம்ப சுகாதார நிலைய ஊழியர்கள் மற்றும் அங்கன்வாடி ஊழியர்கள் மிகச் சிறப்பாக பணியாற்றினர்.

# செங்குன்றம் நாரவாரிகுப்பம் பேரூராட்சி 10 பூத்களில் போலியோ சொட்டு மருந்து சிறப்பு முகாம்

மாதவரம், ஜூன்.29-

மாதவரம் தொகுதி செங்குன்றம் நாரவாரிகுப்பம் பேரூராட்சியில் உள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் செங்குன்றம் தற்காலிக பேருந்து நிலையம் உள்ளிட்ட 10 பூத்களில் திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் ஆணைக்கிணங்க திருவள்ளூர் மாவட்ட சுகாதார அலுவலர் மருத்துவர் பிரியாராஜ் வழிகாட்டுதலின்படி இளம்பிள்ளைவாதம் என்னும் போலியோ இல்லா உலகத்தை உருவாக்க வேண்டி போலியோ சொட்டு மருந்து சிறப்பு முகாம் நடைபெற்றது. முகாமில் வட்டார மருத்துவ அலுவலர் மதுமதி தலைமை ஏற்று பிறந்த குழந்தை முதல் ஐந்து வயது வரை உள்ள குழந்தைகளுக்கு போலியோ சொட்டு மருந்தினை விட்டு முகாமை துவக்கி வைத்தனர். இதில் மருத்துவ அலுவலர் வைஷ்ணவி, வட்டார சுகாதார மேற்பார்வையாளர் லட்சுமனசிங், சுகாதார ஆய்வாளர் சுகுமார் உள்ளிட்ட செவிலியர்கள் உடனிருந்தனர்.



# செங்குன்றம் நாரவாரிகுப்பம் பேரூராட்சி 8-வது வார்டில் போலியோ சொட்டு மருந்து சிறப்பு முகாம்

மாதவரம், ஜூன்.29-

மாதவரம் தொகுதி செங்குன்றம் நாரவாரிகுப்பம் பேரூராட்சி 8வது வார்டு தர்கா தெரு அருகே தமிழ்நாடு முதல்வர் ச.ஜோசப் விஜய் ஆணைக்கிணங்க மாதவரம் சட்டமன்ற உறுப்பினர் எம்.எல்.விஜய் பிரபு வழிகாட்டுதலின்படி இளம்பிள்ளைவாதம் என்னும் போலியோ இல்லா உலகத்தை உருவாக்க வேண்டி போலியோ சொட்டு மருந்து சிறப்பு முகாம் செங்குன்றம் தமிழக வெற்றிக் கழகத்தின் 8வது வார்டு தவெக நிர்வாகி எஸ். ஜீலான் தலைமையில் நடைபெற்றது. மருத்துவர் தீபிகா, செவிலியர் சந்தனமேரி ஆகியோர் முன்னிலையில் சிறப்பு அழைப்பாளராக செங்குன்றம் பேரூர் கழக தவெக செயலாளர் கே.விஜி கலந்துகொண்டு பிறந்த குழந்தை முதல் ஐந்து வயது வரை உள்ள குழந்தை களுக்கு போலியோ சொட்டு மருந்தினை விட்டு முகாமை துவக்கி வைத்தனர்.



■ காவேரிப்பட்டணம் ஜின்னா ரோடு ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் தேசிய போலியோ தின சிறப்பு சொட்டு மருந்து முகாம் நடைபெற்றது. இந்த முகாமில் பள்ளி தலைமை ஆசிரியர் ரமேஷ் தலைமையில் இந்தியன் ரெட் கிராஸ் சொசைட்டி கிருஷ்ணகிரி மாவட்ட செயலாளர் செந்தில்குமார் துவக்கி வைத்தார், கிராம சுகாதார செவிலியர் செல்வி, அங்கன்வாடி பணியாளர் பாரதி, பெண் சுகாதார தன்னார்வலர் திலகவதி, அங்கன்வாடி உதவியாளர்கள் காஞ்சன்னா, சரஸ்வதி ஆகியோர் கலந்து கொண்டனர்..

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161